(3) உரிமைப் பிரச்சினை.

இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி நாளேடுகள் மீது.

அடுத்து 184-வது விதியின்கீழ் அவை உரிமை மீறல் பிரச்சனை ஒன்றை அவையில் எழுப்ப திரு. எஸ். ஆர். இராதா அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவையின் 184-வது விதியின் கீழ் அவை மீறல் குறித்து கீழ்க்கண்ட பொருளை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன்.

8—4—1979-ந் தேதிய இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும் தினமணி பத்திரிகையிலும் 7-4-79 அன்று பேரவை நிகழ்ச்சியை வெளியிடும்போது கீழ்க்கண்ட பகுதியை வெளியிட்டுள்ளன. இந்தியன் எக்ஸ்பிரஸ்—

[A. D. M. K. Member was heard remarking that it was not worse than the lifting of dhoti by a ruling party member.]

தினமணி—''ஆளும் கட்சியினர் வேட்டியைத் தூக்கிக் காட்டினார்களே, அதைவிடவா இது மோசம்'' என்று கேட்டார்.

இது பேரவையில் கூறப்படாத ஒன்று. அவைக் குறிப்பிலும் இல்லாத ஒன்று. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் இதற்கு முன்னால் ஒரு கட்டுரை எழுதப்பட்டு, அது வேண்டுமென்றே என்னை அதிலே சம்பந்தப்படுத்தி என்மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்று திட்டமிட்டு, அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அது அவை உரிமை மீறல் என்று நான் அவைத் தலைவரவர்களுடைய கவனத்திற்கு 12—3—1979 அன்றைக்கு ஒரு அவை மீறலும், அதற்குப் பின்னால் 2—4—79-ல் ஒரு அவை மீறல் பிரச்னையும் கொண்டு வந்து இந்த மன்றத்திலே தலைவரிடம் கொடுத்திருக்கிறேன்.

எனவே, என் பெயரை சம்பந்தப்படுத்தி இந்த அவையில் நடக்காத ஒன்றை நடந்ததாக காட்டுகிற நேரத்தில் என்னுடைய பெயரை களங்கப்படுத்துகிற வகையிலும், என்னுடைய நடவடிக்கைகளை அவர்கள் களங்கப்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்த செய்திகள் தொடர்ந்து வெளியிடப்படுகிற அதே நேரத்தில் என்னை உட்படுத்த வேண்டுமென்ற வகையில் அவையில் நடக்காதவற்றை நடந்ததாக கற்பனை செய்து, அப்படி அவையிலே நடக்கிறது என்று அவைக்கும் ஒரு களங்கத்தைக் கற்பிக்கின்ற வகையில் அந்த பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன. எனவே, அவையில் கூறப்படாத சொற்களை கூறியதாக வெளியிட்டிருக்கிற இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிகைகள்

1979 எப்ரல் 11] [திரு. எஸ். ஆர். இராதா]

அவை உரிமை மீறல் குற்றத்திற்கு உள்ளாகின்றன. ஆகவே, இந்தப் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை பத்திரிகைகள் பற்றியதாக இருப்பதால் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளைக் கேட்டு, விளக்கம் பெற்ற பின்னாலும், சபைக் குறிப்பைப் பார்த்த பின்னாலும் என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

திரு. ஆசைத்தம்பி வீட்டிற்கு இறுதி மரியாதை செலுத்தச் சென்ற சிலர் தாக்கப் பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். 10–4–79 அன்று மறைந்த லோக்சபா உறுப்பினர் திரு. ஏ.வி.பி. ஆசைத் தம்பி வீட்டுக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக சென்ற மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு. ம.பொ.சி. மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. நாராயணசாமி முதலியார் ஆகியோர் கார்மீது, தகுந்த போலீஸ் பாதுகாப்பு கொடுக்காததால் தாக்கியது குறித்து ஏற்பட்டபதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் நா. சுந்தரராஜ், துரை முத்துசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, ரா. மார்க்கபந்து, ப. சந்திரன், கே. கந்தசாமி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. நா. சுந்தரராஜ்.

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்று அதாவது 10–4–79-ம் நாளன்று மறைந்த திரு. ஆசைத்தம்பி அவர்களுடைய இல்லத்திற்கு, மறைந்தவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலே, தமிழகத்திலே மிகப் பெரிய போராட்டங்களைச் சந்தித்தவரான தமிழக சட்டமன்ற மேலவையின் தலைவர் திரு. ம.பொ.சி. அவர்கள் சென்ற நேரத்திலே அவருடைய கார் மறிக்கப்பட்டு அவரை அங்கே இருந்து வெளியே இழுத்து தாக்க முற்பட்டிருக்கிறார்கள். அந்த நேரத்திலே அவர் தன்னைப் பாதுகாக்க வேண்டும் என்று பக்கத்திலே இருந்த வீட்டுக்குச் சென்று பாதுகாப்பாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போதும் கூட அந்த வீட்டின் மீது பல்வேறு வகை